**<u>வேறு அதிகாரபீடமொன்றுக்கு அதிகாரங்கள் கையளிக்கப்படாமல் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்படும் பதவி உயர்வுகள் / பதவிகளுக்கு நியமித்தல் தொடர்பில் ஆணைக்குழுவுக்கு சமர்ப்பிக்கப்படும் மேன்முறையீடுகளை பரிசீலனைக்கு எடுத்தல் தொடர்பிலாகும்.</u>**

1) அரசியலமைப்பின் 59 ஆம் பிரிவுக்கு அமைய அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்படும் தீர்மானமொன்றினால் அதிருப்திக்கு உள்ளாகும் உத்தியோகத்தரொருவரால் அதற்கு எதிராக செய்யும் மேன்முறையீட்டினை பரிசீலனை செய்யும் மேன்முறையீட்டு அதிகாரம் 2002 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க சட்டத்தினால் நிறுவப்பட்டுள்ள நிர்வாக மேன்முறையீட்டு நியாய சபைக்கு வழங்கப்பட்டுள்ளது.

ஆயினும், ஏதேனும் பதவி உயர்வொன்று / பதவியொன்றுக்கு நியமித்தல் தொடர்பில் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் தீர்மானமொன்று மேற்கொள்ளப்பட்ட பின்னர் மற்றும் தீர்மானம் மேற்கொள்ளப்பட முன்னர் உத்தியோகத்தர்களினால் நேரடியாகவோ அல்லது முதல் பிரதியிட்டோ அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்கு சமர்ப்பிக்கப்படும் அதிக எண்ணிக்கையிலான மேன்முறையீடுகளை கருத்திற்கொண்டு அது தொடர்பில் பின்வருமாறு நடவடிக்கை எடுப்பதற்கு அரசாங்க சேவை ஆணைக்குழு தீர்மானிதுள்ளதென்பதை அந்த ஆணைக்குழுவின் பணிப்பின் பேரில் அறியத்தருகின்றேன்.

2)

I. அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் ஏதேனும் பதவி உயர்வு / பதவிக்கு நியமித்தல் தொடர்பில் வழங்கப்பட்ட தீர்மானத்தில் ஏதேனும் தொழில்நுட்ப குறைபாடொன்று நிகழ்ந்துள்ளதா அல்லது அந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்படும் சந்தர்ப்பத்தில் சட்ட விதிகள் பற்றிய இற்றைப்படுத்தப்பட்ட அறிவின்றி வழங்கப்பட்ட கட்டளையொன்றா (Per Incuriam Order) என்பது பற்றி பரிசீலனைக்கு எடுப்பதற்கு உத்தியோகத்தரொருவரால் அல்லது ஓய்வுபெற்ற உத்தியோகத்தரொருவரால் அனுப்பப்படும் முதலாவது மேன்முறையீட்டை மாத்திரம் பரிசீலனைக்கு எடுத்தல்.

II. பின்வரும் மேன்முறையீடுகள் தொடர்பிலான அவதானிப்புக்கள் / சிபாரிசுகள் ஏற்புடைய அமைச்சில் / திணைக்களதத்திலிருந்து கோராது அரசாங்க சேவை ஆணைக்குழுவின் முறையான அனுமதியைப் பெற்று நிராகரித்தல்.

a) மேற்படி தொடர் இலக்கம் I இன் பிரகாரம் முதலாவது மேன்முறையீட்டை பரிசீலனைக்கு எடுத்து தொழில்நுட்ப குறைபாடு இல்லையென நிராகரிக்கப்பட்ட ஒரு விடயம் தொடர்பில் முதலாவது மேன்முறையீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களுக்கு மேலதிகமாக வேறு விடயங்களை குறிப்பிடாது முதலாவது மேன்முறையீட்டின் பின்னர் மீண்டும் மீண்டும் சமர்ப்பிக்கப்படும் மேன்முறையீடுகள்.

b) இதற்கு முன்னர் நிர்வாக மேன்முறையீட்டு நியாய சபையினால் அல்லது மேல்நிலை நீதிமன்றமொன்றினால் நிராகரிக்கப்பட்டுள்ள விடயங்களுடன் தொடர்புடைய மேன்முறையீடுகள்.

c) அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் ஏற்புடைய கட்டளை வழங்கப்பட்ட தினத்திலிருந்து 60 நாட்கள் கழிந்த பின்னர் மற்றும் அந்தத் தாமதத்திற்கு ஏற்றுக்கொள்ளப்பட்ட காரணங்களை முன்வைக்காது சமர்ப்பிக்கப்படும் மேன்முறையீடுகள்.

d) ஏற்புடைய அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளையை வழங்குவதற்கு முன்னர் சமர்ப்பிக்கப்படும் மேன்முறையீடுகள் (அவ்வாறான கடிதங்கள் / முறைப்பாடுகள் மேன்முறையீடுகளாக கருதப்படாத போதிலும் அவற்றின் மூலம் வெளிப்படுத்தப்படும் விடயங்கள் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் தீர்மானங்களை வழங்கும் போது கவனத்திற்கொள்ளப்படும்.)

III. மேலும், ஏதேனும் மேன்முறையீடு ஒன்று மேற்படி 2. II இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் வகைக்கு உட்படுகின்றதா என்பது தொடர்பில் சந்தேகம் எழுகின்ற போது அது தொடர்பில் தீர்மானமெடுப்பதற்காக அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்கு சமர்ப்பிக்கப்படும்.